# ஓம்
# அருள்மிகு ஓம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில், கோவை

அன்பார்ந்த பக்த கோடிகளே !

"கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று முன் முன்னோர் சொல்லிய கூற்று இப்போது நாம் வாழும் உலகில் விவசாய பூமியை பிரித்து வீடுகள் கட்டி வருகின்றனர். அந்த மாதிரி இடத்தில் கோயில் வெகுதூரம் உள்ளது. அதனால் இந்த மாதிரி இடத்தில் ஒரு சிறிய கோயிலாவது கட்டவேண்டும் என்ற எண்ணத்திற்கு ஞான் வணங்கும் திருச்செந்தூரனின் ஆசியுடன் நம் கடவுள்களுக்கு ஆங்காங்கே கோயில் கட்ட பணித்துள்ளோம். இப்போது கோவையில் பொள்ளாச்சி ரோட்டில் ஈச்சனாரி தாண்டி கிணத்துக்கடவு முன் ஏலூர் கிராமத்தில் இறை பணியில் 2 ¾ செண்ட் இடத்தில் அருள்மிகு பிள்ளையார் வந்துள்ளார். மேலும் அருள்மிகு சிவன், பார்வதி, முருகன், தம்பதி சமேதராய் திருவேங்கடசாமி ஆகியோரின் ஆலயங்களும் இவ்விடத்தில் வர உள்ளனர்.

மேலும் ஆங்காங்கே கோவில் தூரமாக உள்ள ஊர்களில் குறைந்தது ½ செண்ட் கிடைத்தாலும் அங்கே ஒரு சிறிய கோவிலை கட்டும் எண்ணத்தை திருச்செந்தூரானும், சிவன், பெருமாள் எனக்கு உத்தரவு கொடுத்துள்ளனர்.

மேலும் கோவில் கட்டுவது பெரிதில்லை. குறைந்தது 2 கால பூஜையையாவது செய்யவேண்டும். அப்போது தான் தெய்வங்கள் அங்கே கொலு விருப்பர். அதனால் பூசாரிகள், பூஜை சாமான்கள், 12 வருடத்திற்கு ஒரு முறை கும்பாபிஷேகம் மற்றும் விஷேச கால பூஜைகளுக்கு ஆகும் செலவினத்திற்கு மாதா மாதம் வங்கியில் நிரந்தர வைப்பு தொகை ஏற்படுத்தி அதில் வரும் வட்டி பணத்தையும், பக்தர்கள் தரும் நன்கொடைகளையும் பெற்று கோவிலை சீருடன் நடைபெற ஆண்டவன் கட்டளையை நிறைவேற்ற உள்ளோம். இதில் தமிழ்நாடு அரசு தலையிடாமல் இருக்கவும், அந்தந்த இடத்தவர் தடை செய்யாமல் இருக்கவும், **ஓம்** என்ற பெயரில் ஒரு டிரஸ்ட் ஆரம்பித்துள்ளோம். விவசாயிகளின் நலன் கருதி அருள்மிகு ஈசனின் தலைமேல் உள்ள கங்கை தாயாரின் அருளால் மழை வளம் செழிக்கவும், நாட்டு மக்களின் நலனுக்காகவும் பிரதமரின் நதிநீர் இணைப்பிற்கு நன்கொடை தரவும் உள்ளோம்.

இறைவனுக்கு ஆலயம் எடுக்க எவனொருவன் முயற்சிகளில் இறங்குகிறானோ அவன் ஆயிரம் பிறப்புகளில் தான் செய்த பாவங்களிலிருந்து விடுபடுகிறான்.

ஆலயம் எழுப்புவது பற்றி ஒருவன் தன் மனதில் சிந்தித்தாலே, நூறு பிறப்புகளில் தான் செய்த பாவங்களிலிருந்து விமோசனம் பெறுகிறான்.

இறைவனுக்கு ஆலயம் எழுப்புவதால் பிரும்மஹத்தி பாவம் விலகிவிடும். யாகம் முதலான கர்மாக்களைச் செய்தும் அடையமுடியாத பலன்களை கோவில் கட்டுவதால் அடையலாம். புண்ணிய தீர்த்தங்களில் நீராடிய பலன்களை ஒருவன் ஆலயம் எழுப்புவதன் மூலம் அடைய முடியும். தேவர்களுக்காக யுத்தத்திலே ஈடுபட்டு மரணம் அடைந்து சொர்க்கத்தை அடையும் பலனை ஆசாரம் உள்ளவனோ அல்லது ஆசாரம் இல்லாதவனோ ஒரு கோயிலைக் கட்டுவதன் மூலம் பெறமுடியும்.

அறிவுள்ள மனிதன் எதிர்பாராத வகையில் சேமித்து தன்னுடைய செல்வத்தை விஷ்ணுவுக்கும் மற்றுமுள்ள தேவர்களுக்கும் ஆலயங்கள் எழுப்பி செலவு செய்தால் அவன் வைகுந்தத்தை அடைந்து மீண்டும் பிறவி எடுப்பதில்லை.

ஆலயப் பணியில் தங்களால் முடிந்த சிறுதுளி பணமோ அல்லது பொருட்களாகவோ தந்தவர்களையும், இறைவன் அவர்களுக்கு பாவத்தை நீக்கி நற்பலனை அருள்வார்.

எனவே திருப்பணி வேலைகள் நம் ஆலயத்தில் நடைபெற உள்ளதை ஓர் அரிய சந்தர்ப்பமாகக் கொண்டு மனமாற நிதியுதவி, பொருள் உதவிகள் செய்து நாம் அனைவரும் இப்புனிதப் பணியில் பங்கு கொண்டு, பிறவாப் பேரின்ப நிலையை அடைவோமாக

கோவில் கட்டும் பணிக்கு நன்கொடை தருபவர்கள் இந்த எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

**<u>நன்கொடை ரொக்கம் / காசோலை (செக்) / வரைவு காசோலை (DD) ஆக ஏற்றுக் கொள்ளப்படும். தொகைகளுக்கு ரசீது பெற்றுக் கொள்ளவும்.</u>**

**ஆதிலட்சுமி - 9841815420, 9487154209 திருவேங்கடம் - 9841415420**
**புனிதவதி திருவேங்கடசாமி - 9488360859**

**<u>குறிப்பு</u>**

ரூ. 10,000/-மும் அதற்கு மேலும் நன்கொடை வழங்கும் பக்தர்களின் பெயர் கல்வெட்டில் பதிக்கப்படும். மேலும் ரூ. 1,00,000/-மும் அதற்கு மேலும் வழங்குபவர்களின் பெயரும் போட்டோவும் கல்வெட்டில் பதிக்கப்படும்.

**ஓம்** கணபதியே சரணம் **ஓம்** முருகா சரணம் **ஓம்** முப்பெரும் தேவியே சரணம்
**ஓம்** சிவனே சரணம் **ஓம்** ஏழுமலையானே சரணம்

இப்படிக்கு
கோயில் நிர்வாகிகள்